தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி 15. மாசி 3, துன்மதி,—திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9,00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.''

ஒரு செயலைச் செய்து முடிப்பதற்குரிய உதவிகளோடு செய்தற்குரிய காலத்தையும் நன்கு அறிந்து செய்தால், செய்தற்கரிய செயல்கள் என்பன இல்லாமல் போய்விடும்.

1. வினாக்கள்—விடைகள்.

(உடுக்குறியிட்ட வினாக்கள்.)

Fishing Harbour at Chinna Muttom

*Q. No.201: THIRU P. VIJAYARAGHAVAN: Will the Hon the Minister for Finance be pleased to state: what is the present stage of the proposal for establishment of a Fishing Harbour at Chinna Muttom in Kanyakumari District?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைமுகம் கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகச் செய்தித்தாள் குறிப்புத் தெரிவிக்கிறது. அதிகாரபூர்வமான தகவல் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநில அரசு மத்திய அரசோடு, இந்த மீன்பிடி துறை முகத்தை அமைப்பதற்குக் கேட்டுக்கொண்டிருக்கிறதா? அப்படி கேட்டுக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், எந்த அடிப் படையில் இதை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது? அதற்கு எவ்வளவு நிதி ஆதாரம் தரவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாண்டுக் காலமாக சின்ன முட்டத்தில் ஒரு மீன்பிடித்துறைமுகம் கட்டவேண்டுமென்ற ஒரு செயற் குறிப்பு மாநில அரசால் மத்திய அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைகப்பட்டுள்ளது. 4-2-82 தேதியில் செய்திதாளில் இதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துவிட்டதாக வந்துள்ளது அதிகாரபூர்வமான மகடிதத்தை மத்திய அரசிடமிருந்து தமிழக

அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்தச் செய்தியில் 2.34 கோடி செலவில் இது கட்டி முடிக்கப்படுமென்றும், 240 எந்திரப் படகுகள் தங்குவதற்கும், 10 பெரிய மீன்பிடி படகுகள் தங்குவதற்கும் ஏற்ற வகையில் இந்தத் துறைமுகம் அமைக்கப் படும்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தித் தாளில் வந்த செய்தியின் அடிப்படையில் மாநில அரசு 50%ம் மத்திய அரசு 50%ம் அளிக்க வேண்டுமென்புதான ஒரு குறிப்பு இருப்பதாக நான் அறிகிறேன். அப்படி மாநில அரசும் மத்திய அரசும் செய்கின்ற நேரத்தில், ஆளுக்குப்பாதி என்கின்ற அளவில் இந்தத்திட்டம் அமைய வேண்டுமென்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச்செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற விண்ணப்பத்தை நாம் போட்டிருக்கிறோம். அவர்கள் என்ன நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை அந்தக் கடிதம் முழுவதையும் பார்த்த பிறகு, அதற்கேற்றபடி நாம் நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச்சின்ன முட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்வது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்கநன்றி. அதே நேரத்தில், கடலரிப்பைத் தடுப்பதற்கு பல்வேறு பகுதி களில் இப்போது தடுப்புச் சுவர்கள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால், மீன்பிடிப்பதில் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதை அடிப்படையாக எடுத்துக் கொண்டு, தூத்தூர் போன்ற பகுதிகளில் சிறிய மீன்பிடி துறை முகங்களை அபிவிருத்தி செய்ய இந்த அரசு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர்கள் ஆங்காங்கு கட்டப் பட்டு வருகின்றன. அதுபற்றிய குறிப்புகள் தனியாக கேள்வி கேட்டால் தர இயலும். மற்ற இடங்களில் துறைமுகங்கள் கட்டுவதுபற்றி கேட்டார்கள். அதற்கும் தனிக் கேள்வி போட வேண்டும். ஆனால் வேறு இடங்கள் என்று சொல்லும்போது வாலிநோக்கம் என்ற இடத்தில் ஒரு துறைமுகம் கட்டு வதற்கான ஒரு செயற் குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எந்த மாவட்டங்களில் இப்படி மீன்பிடித் துறைமுகங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் இருக்கின்றன? இருந்தால் அவைகள் என்னென்ன?

1982 பிப்ரவரி 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வேறு மாவட்டங்களில் மீன்பிடி துறைமுகங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் இருக்கின்றன. சில இடங்களில் துறைமுகங்கள் கட்டப்பட்டு, திறக்கப்பட்டு வருகின்றன. இதற்குத் தனிக் கேள்வி போட்டால், முழு விவரங்கள் தரப்படும்.

மேட்டூர் அணையில் மீன்குஞ்சுகள் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.

*வினா எண். 202.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையில் மீன் குஞ்சுகள் உற்பத்தியைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் நன்னீர் மீன் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் மீன் குஞ்சுகள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் பிரத்யேகத்திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் கட்ட தேர்ந் தெடுக்கப்பட்ட 10 இடங்களில் மேட்டூர் அணையும் ஒன்றாகும். இங்கு ரூ. 11,17,500 செலவில் 20 மீன்குஞ்சு வளர்ப்பு நாற்றங்கால்களும் 20 மீட்டர் சுற்றளவு கொண்ட ஒரு வட்ட வடிவ மீன்குளமும் அமைக்கப்படுகின்றன. கட்டிட வேலைகள் யாவும் 31–3–82க்குள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தினால் மேட்டூர் அணையில் ஆண்டொன்றுக்கு கூடுதலாக சுமார் 75 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இயலும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேட்டூர் அணையில் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் திட்டம் இருப்பதாக அறிவித்தார்கள். பொதுவாக சின்ன மீன்களை பெரிய மீன்கள் தின்றுவிடும் என்று சொல்வார்கள். மேட்டூர் அணையில் பெரிய மீன்கள் சிறிய மீன்குஞ்சுகளை விழுங்கி விடாதவாறு தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்துள்ளதை விட அதிகாரிகளுக்கு மிக அதிகமாகத் தெரியும். மேட்டூர் அணையில் மீன்குஞ்சுகளை வளர்ப்பதில்லை. 20 மீட்டர் சுற்றளவில் 20 நாற்றங்கால்களை வைத்து அவற்றிலே மீன்குஞ்சுகளை வளர்க்க திட்டமிடப் பட்டிருக்கிறது. பெரிய மீன்களோடு சிறிய குஞ்சுகளை விடுவதில்லை.